செ.வெ. எண்: 237

நாள்: 28.03.2012

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (28.3.2012) தலைமைச் செயலகத்தில், தமிழக காவல்துறையினருக்கு குறைந்த விலையில் அனைத்து பொருட்களும் கிடைக்கக்கூடிய வகையில் சிறப்பு அங்காடிகளை 1 கோடி ரூபாய் மானிய உதவியுடன் ஆவடி சிறப்பு காவல் படை பயிற்சி மைய வளாகம், திருச்சி, தமிழ்நாடு சிறப்பு காவல்படை முதலாம் அணி வளாகம் மற்றும் மதுரை, தமிழ்நாடு சிறப்பு காவல்படை ஆறாம் அணி வளாகம் ஆகிய இடங்களில் காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள்.

இராணுவத்தினருக்கும், முன்னாள் இராணுவத்தினருக்கும் குறைந்த விலையில் பொருட்களை இராணுவ நிர்வாகம் வழங்கி வருகிறது. அது போன்ற கேன்டீன் வசதியை காவல்துறையினரும் பெறவேண்டும் என்று எண்ணி, கட்டட வசதிகள், பொருட்களை வாங்குவதற்கான மூலதனம் என்ற வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஒரு கோடி ரூபாய் மானிய உதவி வழங்க ஆணையிட்டார்கள். அதன்படி, ஆவடி, திருச்சி மற்றும் மதுரை ஆகிய மூன்று இடங்களில் சிறப்பு அங்காடிகளை (கேன்டீன்கள்) அமைக்க அரசாணை வெளியிடப்பட்டது. இந்த மூன்று சிறப்பு அங்காடிகளையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள். இந்த சிறப்பு அங்காடிகளில் மதிப்புக் கூட்டு வரி விலக்களிக்கப்பட்டு குடும்பங்களின் அன்றாட தேவைகளுக்குத் தேவையான பொருட்கள் குறைந்த விலையில் காவல் துறையினரின் குடும்பங்களுக்கு கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இச்சிறப்பு அங்காடிகளின் மூலம் காவல்துறையில் பணியாற்றும் பணியாளர்கள், ஒய்வு பெற்ற பணியாளர்கள், அவர்தம் குடும்பத்தினர் மற்றும் உயிரிழந்த காவல்துறை பணியாளர்களின் குடும்பத்தினர் ஆகியோர் பயன் பெறுவர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் காவல்துறையினருக்கான சிறப்பு அங்காடிகளை திறந்து வைத்துப் பேசியதாவது:- அனைவருக்கும் வணக்கம். தமிழ்நாட்டு மக்கள் அச்சமின்றி வாழ, இரவு பகல் பாராது காவல்துறையினர் கடுமையாக பணியாற்றி வருகின்றனர். தமிழகத்தை வன்முறையற்ற அமைதிப் பூங்காவாக மாற்ற வேண்டும் என்ற எனது முயற்சிக்கு காவல்துறையினர் உறுதுணையாக நிற்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. இதுவரை இந்த சிறப்பு அங்காடிகள் சலுகை என்பது ராணுவத்தில் பணிபுரிபவர்களுக்கு மட்டும் தான் இருந்தது, இப்பொழுதுதான் முதன்முறையாக தமிழ்நாட்டில் காவல்துறையினர் குறைந்த விலையில் அனைத்து பொருட்களையும் பெறக்கூடிய சிறப்பு அங்காடிகளை இன்று திறந்து வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். ராணுவப்படையினர் அயல்நாட்டு எதிரிகளிடமிருந்து நம் நாட்டை காக்கிறார்கள், நாட்டு மக்களை காப்பாற்றுகிறார்கள். மாநில காவல்துறையினரோ, சமூக விரோதிகளிடமிருந்து மக்களை காப்பாற்றுகிறார்கள். எனது தலைமையிலான அரசு காவல்துறையினருக்கு பலவிதமான சலுகைகளை வழங்கி வருகிறது. இன்று இந்த சிறப்பு அங்காடிகளை திறந்து வைத்ததில் நான் எல்லையில்லா மகிழ்ச்சி அடைகிறேன். இந்த சிறப்பு அங்காடிகளில் தற்பொழுது பணிபுரியும் காவல்துறையினரும், அவர்களது குடும்பத்தினரும் மற்றும் ஒய்வுபெற்ற காவல்துறையினரும், அவர்களது குடும்பத்தினரும், இறந்துபோன காவல்துறையினரின் குடும்பத்தினரும் பயன்பெறலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே காவல்துறையினர் இந்த சிறப்பு அங்காடிகளை நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு பயன்பெற வேண்டும், மகிழ்வோடு வாழ வேண்டும் என்று தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் காவல்துறையினருக்கான சிறப்பு அங்காடிகளை திறந்து வைத்தமைக்காக தமிழ்நாடு சிறப்பு காவல் படைப்பயிற்சி மையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிபவரின் மனைவி திருமதி. ஹேமலதா அவர்கள் நன்றி தெரிவித்து பேசியதாவது:- மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் தமிழக காவல்துறையில் பணிபுரியும் அனைத்து காவலர்களுக்கும், அதிகாரிகளுக்கும் சலுகை விலையில் வீட்டு உபயோகப் பொருட்கள் வழங்குவதற்கு உத்தரவிட்டதன்பேரில் இன்று சென்னை ஆவடியில் தமிழ்நாடு காவல் பல்பொருள் அங்காடி திறக்கப்பட்டுள்ளது. இந்த திறப்பு விழாவில் நாங்களும் கலந்து கொண்டு பெருமகிழ்ச்சி அடைந்தோம். இரவு பகலாக அயராது பாடுபடும் காவலர்களின் குடும்பங்களுக்கு முதல்வர் அம்மா அவர்கள் செய்த இந்த பெரும் உதவிக்கு எனது குடும்பத்தின் சார்பிலும், தமிழ்நாடு அனைத்து காவலர் குடும்பங்களின் சார்பாகவும் கோடானகோடி நன்றியினை சமர்ப்பிக்கிறோம். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (28.3.2012) தலைமைச் செயலகத்தில், 1 கோடியே 1 லட்சத்து 95 ஆயிரம் ரூபாய் செலவில் 26 மாவட்ட ஆயுதப்படை வளாகங்கள் மற்றும் 10 தமிழ்நாடு சிறப்பு காவல்படை வளாகங்கள் ஆகியவற்றில் காவல்துறையினருக்கான மருத்துவ சேவை மையங்களை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள்.

காவல்துறையினரின் பணி, நீண்ட பணி நேரத்தையும், நெருக்கடியான சூழ்நிலையையும், கடின உழைப்பையும் கொண்ட சவாலான பணியாகும். சிறப்பு காவல் படை வளாகங்களிலும், ஆயுதப்படை வளாகங்களிலும் பணிபுரியும் காவலர்கள் பல நாட்களுக்கு பணி நிமித்தமாக குடும்பத்தைப் பிரிந்து வேறு இடங்களுக்கு செல்ல நேரிடுகிறது. இதனால் அவர்கள் குடும்பங்களுக்கு உடனடி மருத்துவ சேவைகள் கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். இந்த துயர்களை களைவதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், காவல்துறையினருக்கு மருத்துவ சேவைகளை புரிவதற்காக 10 தமிழ்நாடு சிறப்பு காவல்படை அணி வளாகங்களிலும், 26 மாவட்ட ஆயுதப்படை வளாகங்களிலும் மருத்துவ சேவை மையங்கள் தொடங்கப்படும் என்று 24.08.2011 அன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் காவல்துறை மானிய கோரிக்கைக்கு பதில் அளிக்கும்போது அறிவித்தார்கள். இந்த திட்டத்திற்காக தமிழக அரசால் ஒரு கோடியே ஒரு இலட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரத்து தொள்ளாயிரத்து இருபது ரூபாய் அனுமதித்து அரசாணை வெளியிடப்பட்டது. அதன் அடிப்படையில், தமிழ்நாடு சிறப்பு காவல் படையை சேர்ந்த 10 அணிகளுக்கும், 26 மாவட்டங்களில் ஆயுதப்படை பிரிவினருக்கும் மருத்துவ சேவை மையங்களை இன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சிறப்பு காவல்படை மற்றும் ஆயுதப்படை பிரிவினருக்கு மருத்துவ சேவை மையங்களை திறந்து வைத்து பேசியதாவது:- அனைவருக்கும் வணக்கம். காவல்துறையில் பணிபுரிபவர்களுக்கும், அவர்களது குடும்பத்தினர்களுக்கும் மருத்துவ சிகிச்சை அளிக்க ஏற்கனவே மருத்துவமனைகள் இருக்கின்றன. ஆனால் தமிழ்நாடு சிறப்பு காவல்படை மற்றும் ஆயுதப்படை பிரிவினருக்கும், அவர்களது குடும்பத்தினர்களுக்கும் மருத்துவ சிகிச்சை தேவை என்றால் இதுவரை அவர்கள் வெகுதூரம் சென்று சிகிச்சை பெறவேண்டிய கட்டாயம் இருந்ததால் சிரமப்பட்டு வந்தார்கள். ஆகவே, அந்த சிரமத்தை நீக்கவே இப்போது நீங்கள் பணிபுரிகின்ற தலைமையிடங்களிலேயே மருத்துவ சேவை மையங்களையும், மருந்தகங்களையும் இன்று திறந்து வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

2/3

காவல்துறையினரும், அவர்களது குடும்பத்தினரும் இந்த மருத்துவ சேவை மையங்களையும், மருந்தகங்களையும் நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு ஆரோக்கியத்துடன் வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சிறப்பு காவல்படை மற்றும் ஆயுதப்படை பிரிவினருக்கு மருத்துவ சேவை மையங்களை திறந்து வைத்தமைக்காக திருவண்ணாமலை ஆயுதப்படை பிரிவில் காவலராக பணிபுரியும் காவலரின் மனைவி திருமதி. ஐஸ்வர்யா அவர்கள் நன்றி தெரிவித்து பேசியதாவது:- மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி. காவலர் குடியிருப்பில் நாங்கள் வசித்து வருகிறோம். இதுவரை குழந்தைக்கு உடல்நிலை சரியில்லை என்றாலோ, பெரியவர்களுக்கு உடல்நிலை சரியில்லை என்றாலோ 7 கி.மீ. தொலைவிற்குச் சென்று நாங்கள் சிகிச்சை பெற்று வந்தோம். இப்பொழுது அம்மா அவர்களின் உதவியால் நாங்கள் காவலர் குடியிருப்பு வளாகத்திலேயே சிகிச்சை பெறுகிறோம். அம்மா அவர்களின் இந்த உதவிக்கு மனமார்ந்த நன்றி.

இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர், உள்துறை முதன்மைச் செயலாளர், காவல்துறை தலைமை இயக்குநர், கூடுதல் காவல்துறை தலைமை இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) மற்றும் காவல் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

****** 3/3

வெளியீடு: இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
நாள்: 28.3.2012